# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## மானியக் கோரிக்கை எண்–49

**அறிவிப்பு**
**2015 - 2016**

**மருத்துவர் எஸ். சுந்தரராஜ்**
விளையாட்டுகள் மற்றும்
இளைஞர் நலத்துறை அமைச்சர்

## ரூ.1.50 கோடி செலவில் சென்னை வேளச்சேரி நீச்சல்குள வளாகத்தை புனரமைத்தல்

சென்னை வேளச்சேரி நீச்சல்குள வளாகம் 1995 ஆம் ஆண்டு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் போது நீச்சல் போட்டிகள் நடத்துவதற்காகக் கட்டப்பட்டது. இந்த நீச்சல்குள வளாகத்தில் பந்தய நீச்சல்குளம், குதித்தல் குளம் மற்றும் பயிற்சி நீச்சல் குளம் ஆகியவைகள் வடிகலன் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளன. நீருக்கடியில் கேமரா (Underwater camera), நேரம் காட்டியுடன் கூடிய தொடு திண்டு அமைப்பு (Touch Pad System with Timer) போன்ற வசதிகளும், 4000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வகையில் இருக்கை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வளாகம் அமைக்கப்பட்ட நாளிலிருந்து பன்னாட்டு, தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்துவதற்கேற்ற இடமாக திகழ்ந்து வருகிறது. மேலும், பயிற்சி முகாம்கள், தொடர் பயிற்சி நிகழ்வுகள் மற்றும் நீச்சல் கற்றுக்கொள் திட்டம் போன்றவைகள் தொடர்ந்து இந்த வளாகத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. தொடர் பயன்பாட்டின் காரணமாகவும், தேய்மானம் காரணமாகவும் இந்த வளாகத்தில் உள்ள வசதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, தொடர்ந்து பன்னாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு ஏதுவாக சென்னை வேளச்சேரி நீச்சல்குள வளாகத்தை ரூ.1.50 கோடி செலவில் புனரமைக்க மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**மருத்துவர் எஸ். சுந்தரராஜ்**
**விளையாட்டுகள் மற்றும்**
**இளைஞர் நலத்துறை அமைச்சர்**